# சிறுவர் பாட்டு

## நாரா நாச்சியப்பன்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# சிறுவர் பாட்டு

நாரா நாச்சியப்பன்

அன்னை நாகம்மை பதிப்பகம்
2/141, 2வது தெரு, கந்தசாமி நகர்,
பாலவாக்கம், சென்னை- 600 041

# SIRUVAR PAATU

Songs For Children

by

**Nara Nachiappan**

First Edition March, 1960

2nd Edition January, 1968

3rd Edition September, 1999

Author

Published by

**ANNAI NAGAMMAI PATHIPPAGAM**

2/141. 2nd Street, Kandasami Nagar,

Palavakkam, Chennai - 600 041

Printed at

**Kavinkalai Achagam**

2/141, 2nd Street,

Kandasami Nagar,

Palavakkam,

Chennai-600 041

# முன்னுரை

குழந்தைக் கவிஞர் திரு **அழ.வள்ளியப்பா** அவர்கள்

திரு. **நாரா நாச்சியப்பன்** குழந்தைகளுக்காகப் பல்லாண்டுகளுக்கு முன்பே எழுத தொடங்கினார். பதினோராண்டுகளுக்கு முன்பு இவர் எழுதிய "மூன்றாவது இளவரசன்" என்ற கதைப் புத்தகம் பலரது உள்ளத்தைக் கவர்ந்தது. அக்கதை இன்றும் என் உள்ளத்தில் பசுமையாய் உள்ளது. இப்போது இவர் இயற்றித் தந்துள்ள பாடல்களும் குழந்தையுள்ளம் கவர்வனவாய் மகிழ்ச்சியுறுகின்றேன்.

இருத்தல் கண்டு மிக்க

ஊக்கம் வேண்டும் என்பதை வலியுறுத்தும் பாடலின் இறுதியிலே,

**"உயர்ந்த மலையும் கடுகாகும்**
**ஊக்கம் உள்ளவன் முன்னாலே**
**அயர்ந்து நிற்பவன் உள்ளத்தில்**
**அணுவும் பெரிதாய்த் தோன்றுமடா."**

என்று அழகுறக் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம்

இப்படிப் பல நற்கருத்துக்களை சிறுவர் உலகம் விரும்பும் வகையில், அகர வரிசையில், அழகிய தமிழில் கவிஞர் திரு.நாச்சியப்பன் அவர்கள் தந்திருப்பது பாராட்டத்தக்கது. குழந்தைக் குலத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற பேரவாவுடன் முன்வந்துள்ள இக்கவிஞர் பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து, மேன்மேலும் இத்தகைய சீரிய பணிகளைச்செய்ய ஆண்டவன் அருள் சுரப்பானாக.

*-1960*

# பதிப்புரை

இந்நூலில் இரண்டு பகுதிகள் அடங்கியுள்ளன. முதற்பகுதி சில பண்புகளையும் பொருள்களையும் அகர வரிசைப்படுத்தி ஒவ்வோர் எழுத்திற்கும் ஒரு பாட்டாக அமைக்கப் பெற்றது. இரண்டாம் பகுதியோ ஒளவைப் பெருமாட்டி திருவாக்கின் விளக்கமாகப் பிறந்தது.

ஆசிரியர் நாரா நாச்சியப்பன் அவர்களின் கவிதைகளைத் தமிழகம் நன்கு அறியும். எளிமையும் அழகும், புதுமையும், புலமையும் நிறைந்த அவருடைய கவிதைகளை விரும்பிப் படிக்கும் தமிழன்பர்கள் பலர். அவர் சிறுவர்களுக்காக நிறைய எழுதியுள்ளார். சிறுவர் மனப்பான்மை தெரிந்து அவர்கள் விரும்பக்கூடிய எளிய சொற்களை அமைத்து அவற்றிலே கவிதையுணர்வு பொருந்தச்சிறந்த கருத்துக்களை வழங்கும் திறமை மிக்கவர்.

கவிஞரின் இலக்கிய ஆக்கங்களைத் தொடர்ந்து தமிழ் உலகுக்கு வழங்குவதே எங்கள் குறிக்கோள் ஆகும். இக்குறிக்கோள் நிறைவெய்த தமிழ்ப் பெருமக்கள் நல்லாதரவு தரவேண்டுகின்றோம்.

சிறுவர், சிறுமியர்க்கு ஏற்ற சிறந்த இந்நூலினை அவர்களிடையே பரப்ப ஆசிரியப் பெருமக்களும், பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# பாராட்டுரைகள்

சிறுவர் பாட்டு - முதற்பகுதி - முதற்பதிப்பாக 1960-ஆம் ஆண்டில் வெளிவந்த போது பத்திரிகைகள் பல சிறந்த மதிப்புரைகள் எழுதின. அவற்றுள் சிலவற்றை இங்குத் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

## கல்கி

குழந்தைகளுக்காக நாரா நாச்சியப்பன் நிறைய எழுதியுள்ளார். குழந்தைகளுக்கான அவருடைய பாடல்களின் தொகுப்பே இந்தப் புத்தகம். அகர வரிசையில் பாடல்களை அமைத்திருக்கும் முறை அழகாக இருக்கிறது. அன்பு, ஆசை, இன்பம், ஈகை, உண்மை, ஊக்கம், எண்ணம், ஏற்றம், ஐயம், ஒழுக்கம், ஓர்தல், ஒளவை, அஃகேனம் (இப்படியே க,ங,ச வுக்கும்) இந்தத் தலைப்புக்களில் அறிவை வளர்க்கும் அழகழகான பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. ஒரு பக்கத்துக்கு ஒரு பாட்டு - படத்துடன் என்று இந்தப் புத்தகம் சிறப்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

## முரசொலி

அழகான சந்தங்களில் எளிதான சொற்கள் சேர்த்து, அறிவுக் கருத்துக்களைக் தருகிறார் ஆசிரியர். கவிதைகளில் எளிமை இருக்கிற அளவிற்குக் கவிதை உணர்வுமிருக்கிறது.

## சுதேசமித்திரன்

அனுபவத்தால் தெளிந்த நீதிகளைச் சிறு வாக்கியங்களில் ரத்தினச் சுருக்கமாக ஔவையார் கூறினார். அரிச்சுவடி படிக்கும் பாலகர்க்கும் இது நினைவில் மறவாது நிற்கவேண்டி அகர வரிசையில் நீதி வாக்கியங்களைப் பாடினார்.

இந்நூலாசிரியரும் அன்பு, ஆசை, இன்பம், ஈகை என்று பண்புகளையும் பொருள்களையும் அகர வரிசைப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு சொல்லையும் தலைப்பாகக் கொண்டு சிறு சிறு பாட்டுகள். மொத்தம் 32. ஒவ்வொரு பாட்டிற்கும் நல்ல படம்.

## பாட்டுக்கள் எளிமையாக இருக்கின்றன.

உயர்ந்த மலையும் கடுகாகும்
ஊக்க முள்ளவன் முன்னாலே
அயர்ந்து நிற்பவன் உள்ளத்தில்
அணுவும் பெரிதாய்த் தோன்றுமடா!

என்று பேசுகிறது ஊக்கத்தைப் பற்றிக் கூறும் பாடல். இது போல பல பாட்டுகள். நல்ல ஆர்ட் அட்டை, நிறையப் படங்கள். சிறுவர்கள் விரும்பும் விதத்தில் அமைந்திருக்கின்றன.

## மன்றம்

தமிழில் உள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் முதன்மைப்படுத்தி, ஒவ்வொரு பாட்டை ஆசிரியர் தந்துள்ளார். சிறுவர்களுக்கு ஏற்ற நடையில், நல்ல பல கருத்துக்களைத் தாங்கிப் பாடல்கள் உள்ளன.

பாடல்களில் இசையும் மணமும் ஒன்று கூடி வருகின்றன; கருத்து உயர்ந்து விளங்குகிறது.

"சிறுவர் பாட்டு" தொடக்க நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற நூல்.

## செந்தமிழ்ச் செல்வி

இந்நூல் கண்கவர் வனப்பினதாய்ப் பாட்டுக்குப் பொருத்தமான பன்னிற வண்ண ஓவியங்களுடன், உயர்ந்த தாளில், அழகிய எழுத்துக்களால் ஆக்கப்பட்டுள்ளது. பாட்டுக்கள் கற்பார்க்கு எளிதில் மனத்தில் தங்கும் முறையாக அகர வரிசையில் கோத்துள்ளார்கள்.

சிறுவர்க்கு வேண்டிய இன்றியமையாத பயனுள்ள பாடல்களை ஆசிரியர் எண்ணி இனிமையும் எளிமையும் இன்பமும் பொதுளப் பாடியுள்ளார். இசையமைதியும் ஆற்றொழுக்கமும் கவர்ச்சி நடையும் பொருந்தியன எல்லாப் பாட்டுக்களும். இது பாட்டுப் புத்தகமாக அமைந்திருப்பினும் ஏடு தொடங்கும் மாணவர்கட்கு ஒரு புடை நெடுங்கணக்கு (அரிச்சுவடி) ப் போன்றும் அமைந்துள்ளது.

இதனைக் கல்வித் துறையாளர் சிறுவர் வகுப்புக்களுக்குத் துணைப்பாடமாக வைத்துத் துணைபுரிவது நல்லது. ஏனைப் பெருமக்களும் இதனை வாங்கியும் வாங்குவித்தும் ஆசிரியர் மேன்மேலும் இம்முறையில் பல நூல்களை யாத்துத் தமிழுக்கு ஆக்கஞ் செய்யத் துணை புரிவார்களாக.

## தாமரை

நாட்டின் வருங்காலச் செல்வங்கள் குழந்தைகள். அவர்களுக்கேற்றவாறு ஆசிரியர் நாரா நாச்சியப்பன் இந்தக் குழந்தைப் பாடல்கள் நூலை அற்புதமாக இயற்றியுள்ளார். ஒவ்வொரு பாடலிலும் நல் கருத்தும் சிந்தனையும் இனிமையும் துள்ளுகின்றன.

## முஸ்லிம் முரசு

சிறுவர் சிறுமியரின் சிந்தையைக் கவரக் கூடிய விதத்திலே சிங்காரப் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது இச்சிறு நூல்.

“உண்மை பேசும் உத்தமனை உலகம் முற்றும் புகழ்ந்தேத்தும்” “பாடம் நன்றாய்ப் படித்தால் நீ பட்டம் பலவும் பெறுவாய்” என்பன போன்ற அடிகள், படிக்கும் இளம் உள்ளங்களில் பதிந்து அறிவூட்ட வல்லனவாக அமைந்துள்ளன.

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | அன்பு | 1 |
| 2 | ஆசை | 2 |
| 3 | இன்பம் | 3 |
| 4 | ஈகை | 4 |
| 5 | உண்மை | 5 |
| 6 | ஊக்கம் | 6 |
| 7 | எண்ணம் | 7 |
| 8 | ஏற்றம் | 8 |
| 9 | ஐயம் | 9 |
| 10 | ஒழுக்கம் | 10 |
| 11 | ஓர்தல் | 11 |
| 12 | ஔவை | 12 |
| 13 | அஃகேனம் | 13 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | கப்பல் | 14 |
| 2 | பொங்கல் | 15 |
| 3 | சன்னல் | 16 |
| 4 | ஊஞ்சல் | 17 |
| 5 | படம் | 18 |
| 6 | மணம் | 19 |
| 7 | தண்ணீர் | 20 |
| 8 | நடை | 21 |
| 9 | பந்து | 22 |
| 10 | மணி | 23 |
| 11 | வயல் | 24 |
| 12 | அரசர் | 25 |
| 13 | உலகம் | 26 |
| 14 | வண்ணங்கள் | 27 |
| 15 | பழம் | 28 |
| 16 | குளம் | 29 |
| 17 | பறவை | 30 |
| 18 | வனம் | 31 |
| 19 | எண்கள் | 32 |

# சிறுவர் பாட்டு (இரண்டாம் பகுதி)


| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **ஆத்திச்சூடி ( ஔவையார்)** | |
| 1 | அறஞ்செய விரும்பு | 33 |
| 2 | ஆறுவது சினம் | 34 |
| 3 | இயல்வது கரவேல் | 35 |
| 4 | ஈவது விலக்கேல் | 36 |
| 5 | உடையது விளம்பேல் | 37 |
| 6 | ஊக்கமது கைவிடேல் | 38 |
| 7 | எண்ணெழுத் திகழேல் | 39 |
| 8 | ஏற்ப திகழ்ச்சி | 40 |
| 9 | ஐயம் இட்டுண் | 41 |
| 10 | ஒப்புரவு ஒழுகு | 42 |
| 11 | ஓதுவ தொழியேல் | 43 |
| 12 | ஔவியம் பேசேல் | 44 |
| 13 | அஃகஞ் சுருக்கேல் | 45 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **கொன்றை வேந்தன் ( ஔவையார்)** | |
| 1 | அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் | 46 |
| 2 | ஆலயம் தொழுவது சாலவும் நன்று | 47 |
| 3 | இல்லற மல்லது நல்லற மன்று | 48 |
| 4 | ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார் | 49 |
| 5 | உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு | 50 |
| 6 | ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் | 51 |
| 7 | எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் | 52 |
| 8 | ஏவா மக்கள் மூவா மருந்து | 53 |
| 9 | ஐயம் புகினும் செய்வன செய் | 54 |
| 10 | ஒருவனைப் பற்றி ஓரகத் திரு | 55 |
| 11 | ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம் | 56 |
| 12 | ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு | 57 |
| 13 | அஃகமும் காசும் சிக்கெனத் தேடு | 58 |

அ

# அன்பு



அன்பு கொண்டாடிடு கண்ணே - உயிர்கள்
அத்தனையின் மேலும் மெத்தமெத்த நீயே
அன்பு கொண்டாடிடு கண்ணே,

பெற்று வளர்த்தவர் அப்பா அம்மா - கூடப்
பிறந்து வளர்ந்தவர் அண்ணன் தம்பி
கற்றுக் கொடுத்தவர் பள்ளி ஆசான் - நம்மைக்
கண்டு மகிழ்ந்திடும் நண்பர் மீதே
அன்பு கொண்டாடிடு கண்ணே.

துள்ளிப் பறந்து திரியும் சிட்டு - சிறிது
சோற்றைக் கண்டு வரும்அக் காக்கை
அள்ளிப் போட்ட உணவுக்காக - வாலை
ஆட்டி நன்றி காட்டும் நாய் மேல்
அன்பு கொண்டாடிடு கண்ணே!




எல்லோரும் உன்னை
நல்லவன் என்றே
ஏற்றிப் புகழ்ந்திட வேண்டும்
அதைக் கேட்டே என்
எண்ணங் குளிர்ந்திட வேண்டும்

கற்றவர் போற்றிடும்
கல்வியில் சிறந்து நீ
கண்ணாய்த் திகழ்ந்திட வேண்டும்
அதைக்கேட்டே என்
எண்ணங் குளிர்ந்திட வேண்டும்.

என்றன் ஆசையை
ஏற்று நிறை வேற்ற
என்றும் முயன்றிட வேண்டும்
அதைக் கேட்டே என்
எண்ணங் குளிர்ந்திட வேண்டும்.

# இன்பம்



அன்புத் தாயைக் கண்ட போதும்
ஆசைப் பொருள்கள் கிடைக்கும் போதும்
துன்பம் சேர்க்கும் அடிமை வாழ்வு
தொலைந்த போதும் தோன்றும் வாழ்வில்
இன்பம் இன்பமே!- ஆ! ஆ!
இன்பமே இன்பமே!

கருத்து மிகுந்த பாட்டின் இசையும்
காட்டு முல்லைப் பூவின் மணமும்
சிரித்துக் காட்டும் இயற்கை யழகும்
தென்றல் காற்றும் நல்ல நினைப்பும்
இன்பம் இன்பமே!-ஆ! ஆ!
இன்பம் இன்பமே!

உண்மையான நண்பரோடும்
உலகம் அறிந்த புலவரோடும்
தண்மையாகப் பேசுகின்ற
சான்றோ ரோடும் சேரும் போதில்
இன்பம் இன்பமே!-ஆ! ஆ!
இன்பம் இன்பமே!

# ஈகை



இல்லா தொருவன் கேட்டாலே -தம்பி
இருந்தால் கொடுத்தே உதவிடுவாய்
இதுதான் தருமம் அறிந்திடுக -தம்பி
இதுதான் ஈகை அறிந்திடுக!

காலும் கையும் இல்லாதோர் - தம்பி
காசும் பணமும் இல்லாதோர்
நாலு பேரை நம்பித்தான் -வாழ்க்கை
நடத்த வேண்டும் தெரிந்துகொள்!

ஈஈ என்று சிரித்தபடி - வந்து
இரக்கும் ஏழைக் கிரங்கிடுவாய்
ஆ! ஆ! என்று மகிழ்ச்சியுடன் - தம்பி
அள்ளி அள்ளிக் கொடுத்திடுவாய்!

ஏதும் கிடைக்கும் என நம்பிக் - கையை
ஏந்தி வந்து நிற்போனை
ஏமாந் தோடச் செய்யாதே - தம்பி
இயன்ற மட்டும் கொடுத்திடுவாய்!




உ

உண்மை பேசும் உத்தமனை
உலகம் முற்றும் புகழ்ந்தேத்தும்
உண்மை பேசும் உத்தமனை
ஊரும் நம்பிக் கொண்டாடும்

மனதிற் பட்ட கருத்தினையே
மறையா துரைப்போன் உயர்ந்தவனாம்
மனிதர் கூட்டம் அவன்சொல்லை
மதித்துப் போற்றி நடந்திடுமாம்

இருட்டில் வழியைக் காட்டிடவே
எரியும் விளக்கை நம்பிடுவார்
உருட்டுப் புரட்டாம் உலகத்தில்
உண்மை யாளனை நம்பிடுவார்.

உலகில் உள்ள மக்களெல்லாம்
உண்மை பேசி வாழ்ந்தாலே
அலகில் இன்பம் உண்டாகும்
அன்பும் பண்பும் நின்றோங்கும்.




எண்ணிய எண்ணம் நிறைவேற
எவர்க்கும் ஊக்கம் வேண்டுமடா!
நண்ணிய பொருளும் நிலைத்திருக்க
நாளும் ஊக்கம் வேண்டுமடா!

ஊக்கம் கொண்டவன் முயற்சிசெய்யும்
ஒவ்வொரு செயலும் வெற்றியடா!
காக்கும் கடவுள் தடுத்தாலும்
கடமை வீரன் வென்றிடுவான்!

உயர்ந்த மலையும் கடுகாகும்
ஊக்க முள்ளவன் முன்னாலே
அயர்ந்து நிற்பவன் உள்ளத்தில்
அணுவும் பெரிதாய்த் தோன்றுமடா




எண்ணம் உயர்வாய் எண்ணுவாய்
எதையும் இனிதே எண்ணுவாய்
விண்ணை யெட்டிப் பிடிக்கவே
வேண்டும் என்றே எண்ணுவாய்

சின்னஞ் சிறிய செயல்பல
செய்யும் நினைப்பை விட்டு நீ
ஒன்று பெரிதாய் எண்ணினால்
உண்டாம் பெரிய நன்மையே

தனது நலமே எண்ணாதே
தழைக்கும் உலகிற் கதுதீமை!
மனிதர் எல்லாம் வாழவே
மனங்கொள் நீயும் வாழுவாய்!

ஏ




ஏறி ஏறிச் சென்றால் - எதையும்
எட்டிப் பிடிக்க லாகும்
ஏறா மலே நின்றால் - கீழே
ஏங்கி நிற்க நேரும்

பாடம் நன்றாய்ப் படித்தால் - நீ
பட்டம் பலவும் பெறுவாய்
சோடை யாக இருந்தால் - நீ
துன்பப் பட்டுத் திரிவாய்

கட்டுப் பெட்டி போல - ஒரு
கல்லுப் பிள்ளை யார்போல்
விட்ட இடத்தி லேயே - குந்தி
விழித்துக் கொண்டிராதே!

ஆற்றல் உள்ள வரைக்கும் - வெற்றி
அடையும் எல்லை வரைக்கும்
ஏறி ஏறிச் சென்றால் - எதையும்
எட்டிப் பிடிக்க லாகும்.

# ஐயம்



ஐ

ஆகுமா ஆகாதா? என்ற
ஆராய்ச்சிக்குப் பேர் ஐயம்! இந்த
ஆராய்ச்சிக்குப் பேர் ஐயம்!

வேகுமா வேகாதா?
வெந்தாலும் நன்றாய் இருக்குமா?
போகுமா போகாதா?
போனாலும் நன்மை விளைக்குமா?

நம்பலாமா கூடாதா?
நம்பினால் உண்மை இருக்குமா?
செம்புப் பாலைப் போலவே
வெள்ளையாய் மனம் இருக்குமா?

ஆகுமா ஆகாதா? என்ற
ஆராய்ச்சிக்குப் பேர் ஐயம்! இந்த
ஆராய்ச்சிக்குப் பேர் ஐயம்!




ஒ

ஒழுக்கம் உயர்வை உண்டாக்கும்
உண்மைப் புகழை உண்டாக்கும்
முழுக்க முழுக்கப் பாராட்டும்
மூத்தோர் நட்பை உண்டாக்கும்

நம்பிக் கையை உண்டாக்கும்
நன்மை யாவும் உண்டாக்கும்
துன்பந் தன்னை உடன்போக்கும்
தூயோர் உறவை உண்டாக்கும்

அறிவு மிக்கோர் பெய ரோங்கும்
ஆற்றல் மிக்கோர் செய லோங்கும்
உறவு கொண்டோர் வாழ் வோங்கும்
ஒழுக்கங் கொண்டோர் சிறப்போங்கும்!




ஓர்தல் என்றால் ஆராய்தல் என்றே
உணர்ந்து கொள்ளடி என் தங்கமே நீ
தெரிந்து கொள்ளடி.

ஓர்ந்து செய்த செயல்கள் வெற்றி
உண்டாக்கும் காணடி- என் தங்கமே
நன்றாகப் பாரடி.

சிந்தித்துப் பின் செயல் புரிந்தோர்
சிறப்படைந் தாரடி - என் தங்கமே நீ
மறக்கலாகா தடி.

அறிவு மிக்கோர் ஆராய்ந் தேதான்
யாவும் செய்வாரடி - என் தங்கமே தீ
தானும் அறிவாயடி.

ஓர்தல் ஒன்றே உண்மை அறிவை
உயர்வாக்கும் காணடி - என் தங்கமே தீ
அயராமல் கேளடி!

# ஔவை

ஔ



ஔவைப் பாட்டி நமது பாட்டி
அழகு தமிழில் கவிதை சொல்லும்
அருமைப் பாட்டி பெருமு தாட்டி
ஔவைப் பாட்டி நமது பாட்டி

சின்னச் சின்னப் பிள்ளை யெல்லாம்
சேர்ந்து பாடத் தக்க வாறு
சின்னச் சின்ன வாக்கியத்தில்
செல்ல மாகப் பாடி வைத்தாள்

கையில் ஒற்றைக் கம்பை ஏந்திக்
கால்தள்ளாட ஊன்றிச் செல்வாள்
பையன் யாரும் வந்துவிட்டால்
பாட்டுப் பாடி வாழ்த்திச் செல்வாள்.

பாட்டுப் பாடு பாட்டி என்றால்
ஊற்று கூழை என்று சொல்வாள்
வாட்டந் தீரக் கூழ் குடித்து
வகைவகையாய்ப் பாட்டுச் சொல்வாள்!




அடுப்புப் போலே மூன்று புள்ளி
அஃகேனம்

ஆய்த எழுத் தென்று சொல்லும்
அஃகேனம்

ஔவன்னாவை அடுத்து வரும்
அஃகேனம்

அழகுத் தமிழை நிறைய வைக்கும்
அஃகேனம்

இணையில்லாமல் தனித் திருக்கும்
அஃகேனம்

எஃகு போலே உறுதி யானது
அஃகேனம்




கப்பல் இது கப்பல்
கடல்கடந்து போகுமொரு கப்பல்
கரைவிட்டுக் கரைபோகும் கப்பல்

அடக்கிவைத்த யானையினைப் போலே
அலைகடலின் துறைமுகத்தின் ஓரம்
வடக்கயிறும் சங்கிலியும் கொண்டு
வகையாகக் கட்டிவைத்தார் பாரே!

விசைப்பொறியால் சரக்குகளை ஏற்றி
வேற்றூரில் இறக்கிவிடும் கப்பல்
அசைந்தசைந்து கடல்மீது மிதந்தே
ஆட்களையும் ஏற்றிக்கொண்டு போகும்!

அலைகடலில் செல்லுகின்ற போதே
ஆடுகின்ற ஊஞ்சலைப்போல் இருக்கும்
தலைமயக்கம் வந்தாலும் கூட
கடற்பயணம் உடல்நலத்தைக் கொடுக்கும்!

௰



# பொங்கல்

பொங்கல் வந்தது சங்கு முழங்குது
தங்கையே எழுந்திரு!

எங்கும் இன்பமே தங்கி நிறைந்தது
தங்கையே எழுந்திரு!

விரும்பித் தின்றிடும் கரும்பும் இருக்குது
விரைந்து நீ ஓடிவா!

அரும்பு மலர்ந்தது போலச் சிரித்து நீ
அன்பேயிங் கோடிவா!

பட்டி லாடைகள் கட்டி மகிழ்ந்து நீ
பறந்திங்கே ஓடிவா!

கட்டி வெல்லமே! சிட்டுக் குருவியே!
கவிதைகள் பாடிவா!

ச

# சன்னல்



சன்ன லோரம் நின்று கொண்டே
என்ன தம்பி பார்க்கிறாய்?
மின்னல் போலே ஓடுகின்ற
வண்டி யெல்லாம் பார்க்கிறேன்!
அங்கும் இங்கும் செல்லுகின்ற
ஆட்களையும் பார்க்கிறேன்!

சன்ன லோரம் நின்று கொண்டே
என்ன தம்பி காண்கிறாய்?
வீதிக் காற்றும் ஓடி வந்து
வீட்டுக் குள்ளே நிறையுது!
மோதிப் பாயும் காற்றில் வெப்பம்
முழுக்க முழுக்கக் குறையுது!

சன்ன லோரம் நின்று கொண்டே
என்ன தம்பி காண்கிறாய்?
வீட்டுக் குள்ளே பூட்டிக் கொண்டு
வேறு வேறாய் இருந்தவர்
கூட்டும் உறவும் கொண்டு தெருவில்
குலவிப் பழகக் காண்கிறேன்!

# ஊஞ்சல்

ஞ




உந்தி உந்தித் தள்ளலாம்
உயர உயரப் போகலாம்
அந்த ரத்தில் ஏறியே
ஆடிக் கீழே இறங்கலாம்!

வான கத்தைத் தொட்டபின்
வந்து கீழே இறங்கலாம்
போன வேகத் தோடு பின்
புறத்தில் ஏறிப் போகலாம்!

மரமும் செடியும் கொடிகளும்
மற்றும் உள்ள பொருள்களும்
தரையோ டாடக் காணலாம்
தாவி ஊஞ்ச லாடினால்!

ஊஞ்ச லாடும் போதிலே
உலகம் ஆடல் போலவே
தோன்றும் காட்சி காணலாம்
துள்ளித் துள்ளி யாடலாம்!




அப்பா அப்பா வாருங்கள்
அழகான படம் பாருங்கள்
எப்போதும் இந்தப் படத்திலே
இருக்கும் தாத்தா சிரிக்கிறார்!

பல்லில் லாமல் என்னையே
பார்த்துப் பார்த்தேன் சிரிக்கிறார்?
சொல்ல வேண்டும் இப்போதே!
சொல்ல வேண்டும் அப்பாவே!

இந்த நாட்டில் சுதந்திரம்
ஏற்படத் தாம் உழைத்தவர்
இந்தத் தாத்தா தானப்பா!
காந்தித் தாத்தா காணப்பா!

பிழைத்து நாடு விடுதலை
பெற்ற தற்குச் சிரிக்கிறார்!
உழைத்த பலனும் கிடைத்ததால்
உண்மை யாகச் சிரிக்கிறார்?

# ண

# மணம்



பூ மணக்குது தோட்டத்திலே - சந்தனப்
புகை மணக்குது வீட்டுக்குள்ளே
தேன் மணக்குது காட்டுக்குள்ளே - வெட்டி
வேர் மணக்குது நீருக்குள்ளே!

பச்சைக் குழந்தை சிரித்திருக்கும்-தாய்ப்
பால் மணக்குது வாயினிலே
மச்சு வீட்டிலே வைத்திருக்கும் - ஊது
வத்தி மணக்குது வாசலிலே!

பா மணக்குது செந்தமிழில் - பாடும்
வாய் மணக்குது மிகமிகவே!
பூ மணக்குது தோட்டத்திலே - நல்லோர்
புகழ் மணக்குது நாட்டினிலே!

த



# தண்ணீர்

உலர்ந்து வறண்ட தொண்டை குளிர
உண்ண வேண்டும் தண்ணீரே
மலர்ந்து சிரிக்கும் பூஞ்செ டிக்கும்
வார்க்க வேண்டும் தண்ணீரே

சோறு வடிக்கக் குழம்பு வைக்கத்
தோசை மாவைக் கரைக்கவும்
வேறு சமையல் வேலை கட்கும்
வேண்டும் நல்ல தண்ணீரே

ஆறு குட்டை ஏரி கண்மாய்
அருவி ஓடை கேணியே
மாறில் லாது நீர் வழங்க
மழையு முண்டு பாரிலே

படகில் ஏறிக் கடலில் சென்ற
பையன் ஒருவன் கூறினான்:-
“அடடா! எங்கும் தண்ணீர்! தண்ணீர்!
அருந்தத் தானே முடியலே!”

# நடை




குடுகுடு வென்று நடப்பவன் ஒரு
கோமாளி
கோணிக் கோணி நடப்பவன் ஒரு
நோயாளி
படபட வென்று நடப்பவன் ஒரு
பகட்டாளி
பையப் பைய நடப்பவன் ஒரு
சோம்பேறி.

நெஞ்சுயர்த்தித் தலைநிமிர்ந்து
சிங்கம் போலவே
நேராய் நடக்கும் வீரனுக்கே
பெருமை சேருமாம்
அஞ்சிடாத ஆண்மையோடு
காளை போலவே
அழகாய் நடக்கும் வீரனையே
யாரும் விரும்புவார்!

ப

# பந்து



உதைத் துதைத்துத் தள்ளியே
ஓடித் தொடர்ந்து செல்லுவார்
பதைப் படைந்தே எதிரிகள்
பாய்ந்து வந்து மறித்துமே
உதைத்த பந்து வானிலே
உயரக் கிளம்பி மீண்டுமே
குதித்து வந்த பக்கமே
‘கோலை’ நோக்கி ஓடுமாம்!

கோலைக் காத்து நிற்பவன்
குறுக்கில் ஓடிப் பிடித்ததைக்
காலால் எற்றித் தள்ளுவான்
காற்றாய்ப் பறந்து போகுமே!
ஓல மிட்டுக் கூவியே
ஓடிப் பந்தை எதிரியின்
கோலுக் குள்ளே தள்ளினால்
கொள்ள லாகும் வெற்றியே!




ம

ஆசை யோடு பக்த ரெல்லாம்
அணி வகுக்கவே
பூசை வேளை தோறும் கோயில்
மணி யடிக்குதே!

வேலை நேரம் காட்டத் தொழிற்
சாலை தன்னிலே
வேளை தோறும் மணியடிக்குது
காலை மாலையே!

கல்விக் கூடம் திறந்து மூடும்
காலம் காட்டவே
செல்வச் சிறுவர் அறிய மணியின்
ஓசை கேட்குதே!

மணிக்கு மணி கணக்குப் படி
எண்ணிக் காட்டியே
மணியடிக்குது சுவரில் உள்ள
அடிக்கும் மணிப்பொறி!

# வயல்

ய



வாட்ட மின்றி மக்கள்
வாழச் செய்யும் பயிரை
ஊட்டி ஊட்டி வளர்க்கும்
உரம் மிகுந்த வயலே

அன்றொரு நாள் பார்த்தேன்
அத்தனையும் பச்சை!
இன்று வந்து பார்த்தால்
எல்லாம் தங்கம்! தங்கம்!

கொத்துக் கொத்தாய் நெல்லைக்
கொண்டிருக்கும் பயிரே!
பத்தரைப் போல் தரையைப்
பார்த்துக் குனிந்திருக்கும்!

பொங்கலுக்கு முன்னே
புத்தரிசி தந்து
எங்கு மின்பம் சேர்த்தே
இன்ப மாக்கும் வயலே!

# ர




முன்னொரு காலத்திலே
செந்தமிழ் நாட்டினிலே
மூன்றுமன்னர் ஆண்டுவந்தார்
முறையாக ஆண்டுவந்தார்.

வரும்படியில் ஆறிலொன்று
வரியாகப் பெற்றுக் கொண்டு
தருமநீதி தழைத்தோங்கத்
தக்கபடி ஆண்டு வந்தார்.

வீரத்துடன் போர்புரியும்
வேங்கைகளாம் தமிழரசர்
சேர சோழ பாண்டியராம்
திருநிலத்தை ஆண்டவராம்.

பாண்டியர்க்கு மீன் கொடியாம்
பாயும் புலி சோழருக்காம்
ஆண்டிருந்த சேரருக்கோ
அழகான விற் கொடியாம்!

ல



# உலகம்

தட்டையாகத் தோன்றும் உலகம்
தட்டை யல்ல தம்பியே
உருண்டை யாக உள்ள தெனவே
உணர வேண்டும் தம்பியே.

நிலைத்த தாகத் தோன்றும் உலகம்
நிலைத்த தல்ல தம்பியே
உருண்டுருண்டு கதிரைச் சுற்றுது
உணர வேண்டும் தம்பியே.

பெரிய தாகத் தோன்றும் உலகம்
பெரிய தல்ல தம்பியே
உலகின் மிக்க பெரிது கதிரென்று
உணர வேண்டும் தம்பியே.

பகலும் இரவும் உலகைச் சேர்ந்தது
அல்ல அல்ல தம்பியே
கதிரின் ஒளியும் நிழலும் அவையென்று
உணர வேண்டும் தம்பியே.




இலையும் தழையும் குழையும் காயும்
எல்லாம் பச்சை பச்சை
தலையின் முடியும் விறகின் கரியும்
கண்ணின் மணியும் கருப்பு

பாலும் சுண்ண நீரும் அரிசி
மாவும் வெள்ளை வெள்ளை
மாலை வானும் நாவும் இரத்த
நீரும் காணில் சிவப்பு

காலை வெயிலும் மஞ்சட் கிழங்கும்
பொன்னும் நெல்லும் மஞ்சள்
நீலக் கல்லும் பொடியும் வானும்
கடலின் நீரும் ஊதா

ஆரஞ் சுப்பழம் கத்திரிப் பூவென்று
ஆய வண்ணம் இரண்டாம்
பாரில் இந்த நிறங்கள் கலந்த
பலப்பல வண்ணம் உண்டாம்.





பழந் தின்னம்மா பழந்தின்னு
உரித்த வாழைப் பழந் தின்னு

பழுத் திருக்கும் மாம்பழம்
பலாப் பழத்தின் நற்சுளை
சாத்துக் கட்டி ஆரஞ்சு
சத்து நிறைந்த அன்னாசி
பார்த்துப் பறித்த பப்பாளி
பரங்கிச் சீமை ஆப்பிளி
பழந் தின்னம்மா பழந்தின்னு
உரித்த வாழைப் பழந்தின்னு

முத்துப் போலே மாதுளை
முழுதும் இனிக்கும் விளாம்பழம்
விற்றுத் திரியும் கொய்யாவும்
விழிபோல் கரிய நாவலும்
வாங்கி வாங்கித் தின்னம்மா
வயிறு நிறையத் தின்னம்மா
பழந் தின்னம்மா பழந்தின்னு
உரித்த வாழைப் பழந்தின்னு.

# குளம்

ள



ஊருக் கொரு குளம் - தண்
ணீருக் கொரு குளம்
கோயிலுக் கெதிரே - உள்ள
குடிக்கும் தண்ணீர்க் குளம்

வான மழை பெய்து-மடை
வாயின் வழி ஓடி
மீனுந் துள்ளிக் குதிக்க - நீர்
மிகுந்திருக்கும் குளம்

மட்டம் உயரக் கண்டு-ஊர்
மக்கள் உள்ளம் களிக்க
கட்டித் தேக்கி வைத்து - நீரைக்
காக்கும் தெப்பக் குளம்.




குருவி ஒரு பறவை
கோழி ஒரு பறவை
அருவிக் கரை யோரம்
அலையும் கொக்கும் பறவை

கழுகும் ஒரு பறவை
காகம் ஒரு பறவை
அழகுத் தோகை விரித்தே
ஆடும் மயில் பறவை

சேவல் ஒரு பறவை
சிட்டும் ஒரு பறவை
கூவி இசை பாடும்
குயிலும் ஒரு பறவை.

# வனம்




எங்கெங்கும் மரமடர்ந்தே
இருளடர்ந்த வனமே
எல்லோரும் போவதற்குப்
பயமடையும் வனமே

சிங்கம் புலி கரடி இரை
தேடுகின்ற வனமே
சிறுத்தைப்புலி காட்டெருமை
திரிந்திருக்கும் வனமே

குழிமுயலும் சுலைமானும்
குள்ளநரி தானும்
கூட்டமாகப் பிளிறிவரும்
யானைகளும் வாழும்

வழி யெல்லாம் சரசரெனப்
பாம்புகளும் ஊரும்
வனமதிலே செல்வதற்குத்
துணிவுமிக வேணும்.


# 1 2 3 4 5

# 6 7 8 9 10

ஒன்று ஒன்று ஒன்று
　　ஒழுக்க வாழ்வே நன்று
இரண்டு இரண்டு இரண்டு
　　என்றும் செய்யேல் முரண்டு
மூன்று மூன்று மூன்று
　　முயன்றால் வெற்றி தோன்றும்
நான்கு நான்கு நான்கு
　　நல்லோர் புகழே ஓங்கும்
ஐந்து ஐந்து ஐந்து
　　அன்பே வாழும் உயர்ந்து
ஆறு ஆறு ஆறு
　　அறிவு தான்முன் னேறும்
ஏழு ஏழு ஏழு
　　என்றும் நன்றே வாழும்
எட்டு எட்டு எட்டு
　　எவ்விப் பாய்த்தால் கிட்டும்
ஒன்பது ஒன்பது ஒன்பது
　　உதவா தேபொய் என்பது
முட்டை முட்டை முட்டை
　　முடிவில் லாத முட்டை.

# சிறுவர் பாட்டு

## இரண்டாம் பகுதி



# ஒரு குறிப்பு

“ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் என்ற இரு நூல்களும் தமிழகத்துக்குக் கிடைத்த பெருஞ் செல்வங்கள். குறிப்பாக இவை குழந்தை யுலகுக்குக் கிடைத்த மூலதனங்கள். புரிந்தோ புரியாமலோ, தமிழ்க் குழந்தைகள் இவ்விரு நூல்களையும் தங்கள் வகுப்புக்களிலே பாராமல் பாடம் பண்ணும் வாய்ப்புக் கிடைத்திருப்பது அவர்கள் தமிழ் நாட்டில் பிறந்ததனால் பெற்ற பேரும் பேறயாகும்.”

“ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன்போல் அப்படியே நீதிக்கருத்துக்களைக் குழந்தைகளுக்குச் சொல்வது பொருத்தமல்ல” என்று இக்காலத்தில் சிலர் கருதுகிறார்கள். தங்கள் கருத்தை வலியுறுத்த அவர்கள் ஏதோ சில காரணங்களைக் கூறினாலும் அவை முற்றிலும் பொருத்தமானவை யல்ல.

சின்னஞ்சிறு சொற்றொடர்களிலே கூறப்படுகின்ற இந்த நீதிக்கருத்துக்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இளநெஞ்சங்களிலே பசுமரத்தாணி போலப் பதிந்து பயன் விளைத்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.

வளருங் காலத்தில் குழந்தைகளின் மனம் செம்மையான வழியிற் செல்ல வழிகாட்டும் கருத்துக்கள் இவை.

ஆத்திச்சூடியின் முதல் பதின்மூன்று வரிகளையும் கொன்றைவேந்தனின் முதல் பதின்மூன்று வரிகளையும் அடிப்படையாகக் கொண்டு. அக்கருத்துக்களை விரித்துச் சிறுவர் எளிதில் கற்றுணரத் தக்கவாறு இப்புத்தகத்தினை எழுதியுள்ளேன். தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் பயன் பெறுவாராக.

நாரா நாச்சியப்பன்



# ஆத்திச் சூடி

அமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித்
தொழுவோம் யாமே.

_ ஔவையார்

# அறஞ்செய விரும்பு



ஊரும் நாடும் வையகமும்
உய்யப் புரியும் செயலெல்லாம்
பேரும் புகழும் சேர்த்தளிக்கும்
பெருமை மிக்க நல்லறமாம்.

பிறரும் வாழ வேண்டுமெனும்
பெரிய எண்ணம் உண்டானால்
அறமும் செய்ய வேண்டுமெனும்
அறிவு பிறக்கும் நெஞ்சகத்தே

தண்ணீர்க் குளங்கள் தோண்டுவதும்
தாழ்ந்தோர்க் குதவி புரிந்திடலும்
எண்ணில் இன்பம் தரும்அறமே
இயன்ற வரையில் செய்வாயே.

# ஆறுவது சினம்



தீயைக் கக்கும் எரிமலையும்
சீறி வீசும் புயல் காற்றும்
பாயும் வெள்ளப் பெருக் கெடுப்பும்
பாரில் தீமை மிக்கனவாம்.

ஒருவன் கொள்ளும் கோபத்தால்
உண்டாம் தீமை பலவாகும்
பருவம் தவறிப் பொழிகின்ற
மழைபோற் பயனைக் கெடுப்பதுவாம்.

ஒருவன் செய்கை பிடிக்காமல்
உள்ளம் சினத்தைக் கொள்ளுமெனில்
அறிவின் திறத்தால் அதை வென்றே
ஆறி யிருத்தல் நலமாகும்.

# இயல்வது கரவேல்



உதவி என்று வந்தொருவன்
உன்னைக் கெஞ்சி திற்பானேல்
அதனைச் செய்தல் அறமாகும்
அன்பை வளர்க்கும் நெறியாகும்.

முடிந்த அளவு பிறர்க்குதவ
முன்னிற் பதுவே பண்பாகும்
கடிந்து பேசி அனுப்புவதோ
கருணை யற்ற செயலாகும்.

கொடுக்க முடிந்த ஒன்றினையே
கொடுத்தல் உயர்ந்த குணமாகும்
வெடுக்கென் றில்லை எனக்கூறி
விரட்டா திருத்தல் சிறப்பாகும்.

# ஈவது விலக்கேல்



தொழுது நிற்கும் ஒருவன்உறு
துன்பம் கண்டு மனமிரங்கிப்
பழுதில் லாத அன்புடனே
பரிந்து களைதல் நற்பண்பாம்.

தன்னால் உதவ இயலாதேல்
தருமம் செய்யக் கூடியவர்
இன்னார் என்று வழிகாட்டி
இனிதே அனுப்பல் நற்குணமாம்.

அன்பு மிகுந்து கொடுப்பவரை
ஆகா தென்று தடுத்திடலோ
துன்பம் பெருக்கும் செயலாகும்
தூய்மை யற்ற நினைப்பாகும்.

# உடையது விளம்பே



உள்ள தெல்லாம் பிறர் அறிய
உரைத்தல் மிக்க பேதைமையாம்
கள்ளம் அற்றுப் பேசிடினும்
கருத்தில் மாற்றம் விளைத்திடுமாம்.

இல்லா தவர்பால் இருப்பதனை
எடுத்து ரைத்தால் அவர்மனத்தில்
பொல்லா எண்ணம் பலப்பலவாய்ப்
புகுந்து தீமை விளைத்திடலாம்.

இருக்கும் பொருளைப் பிறர் அறிய
எடுத்துச் சொல்லித் துன்பத்தைப்
பெருக்கிக் கொள்ளா திருப்பதையே
பெருக்கி இன்பங் கண்டிடலாம்.

# ஊக்கமது கைவிடேல்



நல்ல பயனைத் தருஞ்செயலே
நாளும் செய்து வரவேண்டும்
செல்வம் சேரும் என்றாலும்
சேரா தெனினும் செயவேண்டும்.

இடர்கள் பலவே தோன்றிடினும்
எதிர்த்துப் பலபேர் நின்றிடினும்
தடைகள் பலவே நேர்ந்திடினும்
தளரா ஊக்கம் வேண்டுமடா.

ஊக்கம் உடையான் இறுதியிலே
உறுதி யாக வென்றிடுவான்
ஆக்கம் அடைவான், இன்பமெலாம்
அடைவான் என்றார் சான்றோரே.

# எண்ணெழுத் திகழேல்



உலகில் அறிவைப் பெறுதற்கே
உற்ற துணையாய் இருப்பதெலாம்
புலமை மிக்க மான்றோர்கள்
போற்றும் கல்வித் துறையேயாம்.

எழுதப் படிக்கத் தெரிந்தவன்தான்
எதையும் கற்றுக் கொண்டிடலாம்
பழுதில் லாமல் எண்ணுபவன்
பாரில் ஏமாந்தழ வேண்டாம்.

எண்ணத் தெரிந்தால் கணக்குவரும்
எழுதத் தெரிந்தால் படிப்புவரும்
எண்ணை எழுத்தை இகழாதே
ஏற்றுப் படிப்பாய் கண்ணேநீ.

# ஏற்ப திகழ்ச்சி



உழைக்க இரண்டு கையிருக்க
உடலில் நல்ல வலுவிருக்க
பிழைக்க ஒன்றும் செய்யாமல்
பிச்சை ஏற்பது இழிவாகும்.

பெற்றோர் அன்பு கொண்டாடிப்
பேணி தம்மை வளர்த்தாலும்
கற்றுச் சிறந்து பெருமைபெறக்
கைமா றியற்றல் கடனாகும்.

பாடு பட்ட பலன்பெறலாம்
பரிசுப் பொருளை ஏற்றிடலாம்
தேடிச் சென்று பல்காட்டித்
தேவை முடித்தல் இழிவாகும்.

# ஐயம் இட்டுண்



வாசல் தோறும் கைநீட்டி
வயிறு வளர்க்கும் ஏழைக்குப்
பாசத் தோடு சோறிடுதல்
பண்பு நல்ல பண்பாகும்.

வயிறு வளர்க்க நமைநாடி
வாழ்த்துப் பாடி வருவோரின்
துயரந் தீர்க்கச் சோறிடுதல்
தூய அறமே அதைப்புரிவாய்.

பிறந்தோ ரெல்லாம் வாழ்ந்திடவே
பெரிய வையம் உண்டென்னும்
அறந்தான் உள்ளம் கொண்டிடுவாய்
ஐயம் இட்டுச் சோறுண்பாய்.

# ஒப்புர(வு) ஒழுகு



ஒருவர்க் கொருவர் துணைசெய்தே
ஒற்று மையாய் வாழ்ந்திடலே
பெருவை யத்தின் நெறியாகும்
பெரியோர் போற்றும் ஒப்புரவாம்.

ஒன்றாய்ப் பழகு வோர்க்கெல்லாம்
உதவி செய்தல் கடனாகும்
நன்றாய் அவர்தம் நட்புறவை
நாளும் வளர்த்தல் நலமாகும்.

சான்றோர் போற்றும் ஒப்புரவாம்
தரும நெறியை மேற்கொண்டே
ஈன்றோர் மகிழ இவ்வுலகில்
இன்ப வாழ்வு நடத்திடுவாய்.

# ஓதுவ தொழியேல்



பள்ளிக் கூடம் சென்றங்கே
படித்தால் போதும் என்றெண்ணித்
துள்ளி ஓடி விளையாட்டே
துணையாய்க் காலம் போக்காதே.

மாலைப் போதில் விளையாடு
மற்றப் போதில் அறிவுதரும்
நூலைத் தேர்ந்து படித்திடுவாய்
நோயாம் மடமை போக்கிடுவாய்.

பள்ளிப் பருவம் சென்றபினும்
படிக்கும் பழக்கம் நிறுத்தாதே
வெள்ளக் கடல்போல் விரிந்திருக்கும்
வித்தை நூல்கள் பலகற்பாய்.

# ஔவியம் பேசேல்



மகிழ்வாய் வாழ்வோர் தமைக்கண்டு
மனம்பொறாமல் பேசாதே.
இகழ்வாய்ப் பேசி அவர்பகையை
ஏற்றுக் கொண்டு நிற்காதே.

உயர்வாய் வாழ்வோர் தமைக்கண்டே
உளம்பொ றாமல் பேசாதே.
முயல்வாய் நீயும் அவர்போலே
முன்னே றிடவே வழிபாராய்.

முயற்சி யுடையார் வாழ்வினிலே
முழுதும் இன்பம் கண்டிடுவார்
உயர்ச்சி யடைவார் எனுமிந்த
உண்மை யறிவாய் நலங்காண்பாய்.

# அஃகஞ் சுருக்கேல்



கடையில் வைத்துத் தானியங்கள்
காசு பெற்று விற்பவனும்
எடையில் படியில் குறைசெய்தே
ஏமாற் றுவது தீதாகும்.

பாலில் தண்ணீர் கலப்பதுபோல்
பருக்கைக் கல்லை அரிசியிலே
நாலுக் கொன்றாய்க் கலப்பவனும்
நல்லோ னாக இருப்பானோ?

ஊரா ரெல்லாம் பழித்தேசும்
ஒருவன் வாழ்வும் வாழ்வாமோ?
யாரே னும்மிவ் வாழ்வுதனை
அடைய விரும்பு வாருண்டோ?

# கொன்றை வேந்தன்

செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித்
தொழுவோம் யாமே,

- ஔவையார்



# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்



பிள்ளை வேண்டும் வேண்டுமெனப்
பெரிதும் நல்ல தவமிருந்தே
உள்ளம் மகிழப் பெற்றோர்கள்
உண்மை நமது பெற்றோரே.

ஊறும் அன்பால் நாள்தோறும்
ஊட்டி வளர்த்து நலஞ்சேர்ப்பார்
வேறு தெய்வம் இவர்போலே
விரும்பி நம்மைக் காத்திடுமோ?

கண்ணின் இமைபோல் நமைக்காப்பார்
கைமா றெதுவும் கருதாரே
எண்ணில் இனிய தெய்வமிவர்
எதிரில் தோன்றும் தெய்வமிவர்.

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று



கடலும் மலையும் உலகெல்லாம்
காணும் பொருள்கள் அவையெல்லாம்
உடலும் உயிரும் அறிவெல்லாம்
உண்டாக் கியவன் இறைவனடா.

எல்லா இடமும் அவனிடமே
எல்லாப் பொருளும் அவன் பொருளே
எல்லாப் பொழுதும் அவன்பொழுதே
இதனை நீநன் குணர்ந்திடுவாய்.

ஆல யம்போய் நாள்தோறும்
அவனைப் போற்றித் தொழுவதனால்
சீலம் பெருகும்; நன்மையெலாம்
சேரும் என்றார் சான்றோரே.

# இல்லற மல்லது நல்லற மன்று



பெரியவ ரான பின்னாலே
பெண்ணும் ஆணும் ஒன்றாகித்
திருமணம் செய்து கொண்டினிது
சேர்ந்து வாழ்வது இல்லறமாம்.

இல்லற வாழ்வால் குடிவழியே
இனிது தழைக்கும் என்பதனால்
நல்லற மென்றே பெரியோர்கள்
நவின்றார் அச்சொல் போற்றிடுவாய்.

துறவு பூண்டு வாழ்வதுவே
தூய வாழ்வென் பார்சிலரே
அறமன் றென்றே நல்லறிஞர்
அதனை ஒதுக்கி விட்டாரே.

# ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்



தேடித் தேடிப் பணம்சேர்ப்பார்
சேர்த்த தெல்லாம்பெட்டகத்தே
மூடி மூடிப் பூட்டிவைப்பார்
முயன்று மேலும் சேர்த்திடுவார்.

உறவுக் காரர் யாருக்கும்
உதவி புரிய மாட்டாரே
அறமும் செய்யார்! மக்கட்கும்
அளியார் கருமித் தனத்தாலே.

ஈயா திருப்புப் பெட்டகத்தே
இறுக்கி வைத்த பணமெல்லாம்
தீயார் பொல்லார் திருடர்க்கே
சேரும் இறுதிக் காலத்தே!

# உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு



அளவாய் உண்ண வேண்டுமென
ஔவைப் பாட்டி சொல்லியசொல்
இளம்பெண் கட்கும் ஆடவர்க்கும்
இருபா லார்க்கும் தகுஞ்சொல்லே.

மிகுந்த உணவால் செரிமானம்
மெதுவாய் நடக்கும்; சோம்பல்மிகும்
புகுந்து நோய்கள் உடலினிலே
பொறுக்க முடியாத் துன்பியற்றும்.

வாயைக் கட்டி வாழ்வோர்க்கே
வயிறு நன்றாய் இருந்திடுமாம்
தூய உடலும் நல்வாழ்வும்
சுறுசு றுப்பும் உண்டாமே!

# ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்



காசு மிகவைத் திருந்தாலும்
கல்வி மிகக்கற் றிருந்தாலும்
நேசம் ஊரார் பாலின்றேல்
நிலைகெட் டழிய நேர்ந்திடுமே.

பழக்க வழக்கம் மாறிடினும்
பண்பில் லாது நடந்திடினும்
இழக்க நேரும் அவரன்பை
இயைந்து வாழ்தல் நன்றாகும்.

ஊரா ரெல்லாம் போற்றிடவே
உகந்த முறையில் நடந்திடுவோன்
சீராய் வாழ்வான் நலங்காண்பான்
சிறப்பு மிகப்பெற் றின்புறுவான்.

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்



உலகில் உள்ள தொழிற்கெல்லாம்
உயிராய் இருப்பது கணக்காகும்
பலகால் அதனைக் கருத்தூன்றிப்
பயிலல் மிக்க சிறப்பாகும்.

எழுத்துக் கூடிச் சொல்லாகி
இயைந்து கருத்துத் தொடராகி
உளத்துப் பிறந்த எண்ணமெலாம்
உரைக்கும் மொழியாய் விரிவாகும்.

வழுவில் லாத மொழிபேச
வகைசெய் கின்ற இலக்கணமும்
பழுதில் லாத தொழில்செய்யப்
பயனாம் கணக்கும் இருகண்ணாம்.

# ஏவாமக்கள் மூவா மருந்து



ஒருவர் சொல்லும் குறிப்பைத்தான்
உடனே அறிந்து செயலாற்றல்
பெருமை தருமோர் திறனாகும்
பேணி வளர்க்கத் திருவாகும்.

தந்தை வேலை ஏவுமுனம்
தானே முடித்துத் தரும்பிள்ளை
சிந்தை களிக்கச் செயப்பிறந்த
தெய்வ மருந்துக் கொப்பாவான்.

ஏவிச் செய்வார் நன்மக்கள்
என்றும் செய்யார் கீழ்மக்கள்
ஏவா முன்னம் குறிப்பறிந்தே
இயற்று வோரே பொன்மக்கள்!

# ஐயம் புகினும் செய்வன செய்



தெய்வம் வந்தே தடுத்தாலும்
 தீமை வந்தே அடுத்தாலும்
செய்யத் தக்க செயலெல்லாம்
 செய்ய வேண்டும் எப்போதும்.

வறுமை யுற்றுக் கிடந்தாலும்
 வாடிப் பிச்சைக் கலைந்தாலும்
சிறுமை யற்ற நற்செயலே
 செய்ய வேண்டும் எப்போதும்.

துன்பம் தனக்கு நேர்ந்தாலும்
 துயரந் தன்னைச் சேர்ந்தாலும்
இன்பம் பிறர்க்குத் தருஞ்செயலே
 இயற்ற வேண்டும் எப்போதும்.

# ஒருவனைப் பற்றி ஓரகத் திரு



தூய குணங்கள் உடையவனைத்
துணையாய்ப் பெறுதல் சிறப்பாகும்
ஆய இன்பம் அத்தனையும்
அவனால் அடையப் பெறலாகும்

நாட்டில் உள்ள நலமெல்லாம்
நல்லோன் ஒருவன் துணைவந்தால்
வீட்டில் வந்து சேர்ந்துவிடும்
வெள்ள இன்பம் தேங்கிவிடும்.

குடியி ருக்கும் ஓரிடமும்
கூடுந் துணையும் நன்றானால்
விடியும் பொழுதும் இன்பந்தான்
விளையும் பயனும் இன்பந்தான்!

# ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்



அறநூல் பலவே ஆய்ந்திடலாம்
அவற்றின் நுட்பம் தேர்ந்திடலாம்
பிறரும் அறியக் கூறிடலாம்
பிறழா மல்தான் இருந்திடினே.

ஊருக் கெல்லாம் அறங்கூறி
ஒழுக்கம் தான்கைக் கொள்ளாதோன்
பாரில் அற்பப் பதராவான்
படித்த தெல்லாம் வீணாமே!

ஒழுக்கம் தவறா வாழ்வுதனை
உடையான் உலகைத் தன்வழியில்
இழுக்கும் ஆற்றல் பெற்றிடுவான்
இணையில் தலைவன் ஆகிடுவான்.

# ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு



உலக மக்கள் எல்லோரும்
உயர்ந்த வாழ்வு பெற்றின்ப
நலங்கள் எய்த வேண்டுமென
நாடி உழைத்தல் அறிவாகும்.

வாழும் ஒருவன் நிலைகண்டு
வாடிப் புழுங்கிப் பேசுவது
தாழும் அறிவாம்: தன் நிலையைத்
தானே தாழ்த்திக் கொள்ளுவதாம்.

ஆக்கம் மிக்கார் போல்தானும்
அனைத்து நலமும் பெறவேண்டின்
ஊக்கத் தோடே எந்நாளும்
உழைத்து முயன்றால் உயர்வுண்டாம்.

# அஃகமும் காசும் சிக்கெனத் தேடு



சேருங் காலம் சேர்த்தால்தான்
    தேவை யுள்ள காலத்தே
யாரும் உதவா விட்டாலும்
    அனுப வித்துக் கொளலாகும்.

உரிய பருவம் தேடாமல்
    உறங்கிக் கிடந்து விட்டாற்பின்
பெரிய தேவை வரும்போது
    பேத லிக்க நேருமே.

பருவ மறிந்து தானியமும்
    பணமும் தேடிக் கொண்டாற்பின்
வருவா யற்ற காலத்தே
    வாட்ட மின்றி வாழ்ந்திடலாம்!



# உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com